**Dated : 29.07.2026** (நேரம் : காலை 11.02 மணி)

**MC. No. 16/2025**

**எ.ம.சா.1 திரு. கணேஷ்குமார்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை –**

1ம் மனுதாரருக்கும் எனக்கும் திருமணம் நடந்ததையும், எங்களுக்கு 2ம் மனுதாரர் பிறந்ததையும் நான் ஒப்புக்கொள்கிறேன். திருமணத்திற்கு 2 வருடங்களுக்கு முன்பிருந்தே நான் வெளிநாட்டில் வேலை பார்த்தேன். கடைசியாக 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்தேன். 1ம் மனுதாரரின் தகப்பனார் இறப்பிற்கு நான் சென்றபோது என்னை அவர்கள் வீட்டில் மதிக்கவில்லை என்று தான் முதலில் பிரச்சனை ஏற்பட்டது என்றாலும், அதை மட்டும் தான் நிரூபணவாக்குமூலத்தில் பிரச்சனையாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று கூறுவது சம்மந்தமாக எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது சம்மந்தமாக தேதி, மாதம் மற்றும் வருடம் பற்றிய விவரங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். கடைசியாக 07.04.2024ம் தேதி என்னை அடித்தது சம்மந்தமாக மேற்படி தேதியில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். அந்த புகார் மனுவின் நகலையோ அல்லது நான் காயம்பட்டதற்கான மருத்துவ குறிப்புகளையோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் மனுதாரர் ஆனந்தம் ஜவுளி கடையில் வேலை பார்த்து சம்பளம் வாங்கி வருவதாக கூறுவதை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அவர் தற்போது வேறு கடையில் வேலை பார்ப்பதாக நிரூபிப்பதற்கும் எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் மனுதாரர் ஆனந்தம் ஜவுளி கடையில் வேலை பார்த்தாகவும், தற்போது வேறு கடையில் வேலை பார்ப்பதாகவும் பொய்யாக

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.07.29 17:44:49 +0530

கூறுகிறேன் என்றால் சரியல்ல. 28.06.2024, 29.07.2024, 02.08.2025, 09.09.2025, 09.12.2025, 05.07.2026, 02.02.2026 ஆகிய தேதிகளில் பணம் அனுப்பியதாக தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 ஆவணங்களின் படி மொத்தம் ரூ.39,750/- மட்டும் தான் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதை தவிர 1ம் மனுதாரருக்கு நான் வேறு எந்த தொகையும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் மனுதாரர்களுக்கு பராமரிப்பிற்கு பணம் எதுவும் செலுத்ததாலும் 1ம் மனுதாரருக்கு எதிராக நான் விவகாரத்து வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் 1ம் மனுதாரர் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் கடந்த 3, 4 வருடங்களாக மனுதாரர்களை பராமரிக்கவில்லை என்பதாலும் 1ம் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருந்தார் என்பதாலும், அதற்காக அவர் என்னுடன் பேசுவதற்கும், சேர்ந்து வாழ்வதற்கும் பலமுறை முயற்சி செய்தார் என்றும் ஆனால் நான் தான் அவருடன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. சேர்ந்து வாழ வைக்கும்படி கேட்டதால் 1ம் மனுதாரர் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, சிறு சிறு விசயங்களுக்கெல்லாம் என்னை மிரட்டுவதற்காக அவர் பொய்யான புகார் கொடுத்தார். நான் சொல்வதுபோல் அவ்வாறு சிறு சிறு விசயங்களுக்கெல்லாம் என்னை மிரட்டுவதற்காக அவர் பொய்யான புகார் கொடுத்ததாக சொல்வது பொய் என்றும், அவ்வாறு எந்த புகாரும் 1ம் மனுதாரர் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 15.05.2024ம் தேதி ஊர் தலைவர் மத்தியில் இது சம்மந்தமாக பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தின்போது 1ம் மனுதாரர் என் மீது பொய்யாக புகார் கொடுத்து வருகிறார் என்றும் அதனால் அவருடன் நான் சேர்ந்து வாழ மாட்டேன் என்றும் சொல்லிவிட்டேன் என்றால் சரிதான். 1ம் மனுதாரர் அவரது தாயாரின் பேச்சை கேட்டுக்கொண்டு அவ்வாறு பொய்யான புகார் கொடுப்பதாக பஞ்சாயத்தில் சொன்னேன். பஞ்சாயத்தில் 1ம் மனுதாரர் தனிக்குடித்தனம் வைத்தால் தான் என்னுடன் சேர்ந்து வாழ வருவதாக சொன்னார். தற்போது 1ம்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.29 17:44:54 +0530

மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றும், நான் அவரை என்னுடன் அழைத்துசெல்ல தயாராக இருக்கிறேனா என்றால் தற்போதைக்கு நான் அவரை அழைத்து செல்ல தயாராக இல்லை. நான் எந்த நிபந்தனை விதித்தாலும் அதற்கு 1ம் மனுதாரர் தயாராக இருக்கிறார் என்றால் அவர் ஒவ்வொரு முறையும் இவ்வாறு சொல்லிவிட்டு என்னை மிரட்டுவதையே வழக்கமாக வைத்துள்ளதால் நான் அவருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லை. சுமார் 10 முறை அவ்வாறு 1ம் மனுதாரரை என்னுடன் அழைத்து செல்லவில்லை. மேற்படி 10 முறை நடந்த தேதி விவரம் பற்றி என்னால் சொல்ல முடியாது. அவ்வாறு 10 முறை 1ம் மனுதாரரை நான் அழைத்து சென்றதாக மனுவிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தான் 1ம் மனுதாரரை விட்டுவிட்டு வேறு திருமணம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் வேலை பார்த்து நிறைய பணம் வைத்துள்ளேன் என்றும், அதை வைத்துக்கொண்டு எதையும் செய்துவிடலாம் என்ற நம்பிக்கையில் மனுதாரர்களை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வேலை பார்த்து வரும் கம்பெனியின் பெயரை நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை. தற்காலிகமாக வேலை பார்ப்பதால் அதுபற்றி சொல்லவில்லை. நான் மாத வருமானம் பெற்றுவருவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. கடந்த 3 ஆண்டுகளாக மனுதாரர்களை நான் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்களை நான் தான் பராமரிக்கவேண்டும் என்றால் சரிதான். நான் தான் பராமரிக்கிறேன். நான் மனுதாரர்களை பராமரிக்காததால் தான் அவர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 2ம் மனுதாரர் 5ம் வகுப்பு படிக்கிறான். விடுமுறையில் அவன் என்னுடன் தான் இருக்கிறான். இந்த மனுவிற்கு பிறகு தான் 2ம் மனுதாரரை விடுமுறையில் என்னுடன் வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பணம் சம்பாதிப்பதற்கான திரானி

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.29 17:44:59 +0530

உள்ளது என்றும், வெளிநாட்டில் வேலை பார்த்து மாதம் ரூ.1 லட்சம் சம்பளம் பெற்றேன் என்றாலும், அதனால் மனுதாரர்கள் கோரும் ஜீவனாம்ச தொகை கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வேண்டுமென்றே மனுதாரர்களை மனுதாரர்களை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றும் எனவே நான் மனுதாரர்களுக்கு ஜீவனாம்ச தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**அனுமதியுடன் கூடுதல் முதல் விசாரணை :**

என் அம்மா பெயரில் உள்ள நகை ஈட்டுக்கடன் ரசீதுகள் கொண்டுவந்துள்ளேன். அதன் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ.2. (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டது) (மேற்படி ஆவணத்தில் உள்ள விஜயா என்பவருக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்பதால் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்யக்கூடாது என்று மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார். மேற்படி ஆட்சேபனைக்கு உட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது).

**குறுக்கு விசாரணை :**

நாங்கள் சொந்தவீடு கட்டுவதற்கு 1ம் மனுதாரரின் 4 பவுன் நகைகளை வாங்கி அடகு வைத்து கிடைத்த பணத்தை வைத்தும் வீடு கட்டினோம் என்றால் சரியல்ல. என் அப்பா கூலி வேலை பார்த்து வருகிறார். எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள ஒரு ரசீதில் 08.07.2026 அன்று தான் அடமானம் வைத்ததாக உள்ளது என்றால் அது புதுப்பித்த தேதி ஆகும். அது புதுப்பிக்கப்பட்ட தேதி என்று அதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதிலுள்ள மற்றொரு ரசீதில் 18.11.2025 அன்று தான் அடமானம் வைத்ததாக உள்ளது என்றால் அது புதுப்பித்த தேதி ஆகும். அது புதுப்பிக்கப்பட்ட தேதி என்று அதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள விஜயா என்பவருக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.29 17:45:05 +0530

அவர் எதற்காக நகை அடமானம் வைத்தார் என்பதற்கும், நான் அந்த பணத்திற்கு அசல் அல்லது வட்டி கட்டுகிறேன் என்பதற்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தை ஏமாற்றுவதற்காக தற்போது எ.ம.சா.ஆ.2 ஆவணத்தை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போதைய புதிய வங்கி சட்டத்தின்படி பழைய நகைக்கடன்களை புதுப்பிக்க இயலாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.29 17:45:11 +05'30'

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.